**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)
(பா.கு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109411

1. District மாவட்டம் : Virudhunagar  PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption  Year: ஆண்டு 2024  FIR No.: மு.த.அ. எண் 06/2024  Date: நாள் 08.07.2024

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018  Sections பிரிவுகள்: u/s 7
(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 19.06.2024 at 12.00 hrs  Date to : நாள் வரை 06.07.2024 at 10.30 hrs
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.07.2024  Time : நேரம் 15.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 08.07.2024  Time : நேரம் 17.00 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  About 35 Kms / North east
Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.மு.நக்கீரன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.முருகன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 15.03.1990
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம்
(g) Address : முகவரி எண்.2/248, காளியம்மன் கோவில் தெரு,
கீழஉப்பிலிக்குண்டு,
காரியாபட்டி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.செல்வராஜ், கிராம நிர்வாக அலுவலர், டி.கடமங்குளம், காரியாபட்டி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
- வாதியால் தாமதம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது.</u>

நான் இன்று 08.07.2024 பிற்பகல் 15.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி தாலுகா, கீழஉப்பிலிக்குண்டு, கதவு எண்.2/248, காளியம்மன்கோவில் தெருவை சேர்ந்த திரு.முருகன் என்பவரின் மகன் திரு.மு.நக்கீரன் என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகாரை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 08.07.2024 மாலை 17.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திரு.செல்வராஜ், கிராம நிர்வாக அலுவலர், டி.கடமங்குளம், காரியாபட்டி தாலுகா விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2024

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

மு.நக்கீரன் 8/7/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

08.07.2024 at 17.15.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. BOOBALANATHAN.
Rank: நிலை INSP OF POLICE.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

**விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.06/2024 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.மு.நக்கீரன் அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்:- மு.நக்கீரன், வயது 34/2024, த/பெ.முருகன், கதவு எண்.2/248, காளியம்மன் கோவில் தெரு, கீழஉப்பிலிக்குண்டு, காரியாபட்டி தாலுகா, விருதுநகர் மாவட்டம். பெறுநர்:- காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, விருதுநகர். அய்யா, நான் விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி தாலுகா, கீழஉப்பிலிக்குண்டு கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். அவ்வப்போது கொத்தனார் வேலைக்கும் செல்வேன். மதுரை மாவட்டம், அவனியாபுரம், சேதுசமுத்திர நகர், ராயல் தெருவில் வசிக்கும் எனக்கு தெரிந்த திரு.சேவுகரத்தினம் என்பவரின் மகன் திரு.ரவி என்பவருக்கும் சொந்தமான விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி தாலுகா, டி.கடமங்குளம் கிராம புல எண் 56/13B பட்டா எண்.2617 ல் 32 ஏர்ஸ் நன்செய் நிலம் உள்ளது. அதேபோல் காஞ்சிபுரம் மாவட்டம், முகலிவாக்கம், மதனந்தபுரம், காமாட்சியம்மன் நகரில் வசிக்கும் திரு.ஜெகதீஸ்சன் என்பவரது மகன் திரு.கார்த்திக் என்பவருக்கு சொந்தமான விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி தாலுகா, டி.கடமங்குளம் கிராம புல எண் 56/13A பட்டா எண். 2624 ல் 0.7.50 ஏர்ஸ் நன்செய் நிலம் உள்ளது, அதேபோல் மதுரை மாவட்டம், வில்லாபுரம், கணபதி நகர், ஹரிஹரன் தெருவில் வசிக்கும் திரு.கருணைபிரகாசம் என்பவரின் மகன் திரு.கண்ணன்பாபு என்பவருக்கு சொந்தமான விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி தாலுகா, டி.கடமங்குளம் கிராம புல எண்.56/3 (மற்றும்) 4 பட்டா எண் 2623 ல் 0.3.00 ஏர்ஸ் நன்செய் நிலம் உள்ளது. மேற்படி நில உரிமையாளர்கள் அவர்களுக்கு சொந்தமான அவர்களின் நிலங்களை என்னை பராமரித்து பாதுகாக்கும்படி கூறியபடியால், நான் அவைகளை பராமரித்து வருகிறேன். அந்த நிலங்களுக்கு முறையாக நான்குமால் பார்த்து எல்லைக்கல் இல்லாமல் இருந்ததால், மேற்படி நிலங்களை சர்வேயர் மூலமாக நான்குமால் பார்த்து அளந்து எல்லைக்கல் ஊன்றி நடவடிக்கை எடுப்பதற்கு ஜமபந்தி நடக்கும்போது மனு கொடுத்து நடவடிக்கை எடுக்க மேற்படி நில உரிமையாளர்கள் தெரிவித்தனர். அதன்படி நான் 18.06.2024 அன்று காரியாபட்டி தாலுகா அலுவலகத்தில் நடைபெற்ற ஜமபந்தியில் அங்கிருந்த அதிகாரியிடம் மேற்படி நிலத்தினை அளந்து தருமாறு மனு ஒன்றை கொடுத்தேன். அவர்கள் மனுவை வாங்கிவிட்டு, இது சம்மந்தமாக உங்கள் செல்போனில் ஒரு குறுஞ்செய்தி வரும், அதன்பிறகு விஏஓ-வை பார்க்கும்படி கூறினார்கள். அதன்படி என்னுடைய செல்போன் எண்ணான 8489070121-க்கு அன்று மதியம் 2.16 மணிக்கு உங்கள் கோரிக்கை மனு எண்.TN/REV/VNR/I/JMB/18.JUN24/8115969 துறைக்கு ஒதுக்கப்பட்டு உள்ளது என்று குறுஞ்செய்தி வந்தது. அதனால் நான் மறுநாள் (19.06.2024) பகல் சுமார் 12.00 மணிக்கு

டி.கடமங்குளம் V.A.O அலுவலகமாக செயல்படும் காரியாபட்டி டவுனில் உள்ள A.B பிளாசா காம்ப்ளக்ஸ்க்கு சென்று அங்கு இருந்த VAO திரு.செல்வராஜ் அவர்களை சந்தித்து எனக்கு வந்த குறுஞ்செய்தியை அவரிடம் காண்பித்தேன். அப்போது அவர் என்னிடம் கோபமாக ஜமபந்தியில் மனு கொடுக்கிற அளவுக்கு நீங்க என்ன பெரிய ஆளா, நீங்க எங்க எப்படி மனு கொடுத்தாலும் சர்வேயரு அளக்குறதுக்கு என்னத்தான் கூப்பிடுவாறு, நான் சொன்னாதான் உங்க இடத்தை சர்வேயரு அளக்க வருவாறு நான் சொன்னபடி செய்தால் உங்க வேலையை சீக்கிரத்தில் முடித்து தருவேன், இல்லையென்றால் மாச கணக்கில் இழுத்து அடிப்பேன், நீங்க விவரமான ஆளு உங்களுக்கு தெரியாதா, நீங்கள் கொடுத்திருக்கிற மனுவில் நிறைய சர்வே எண் வருது, அது எல்லாவற்றிற்கும் நான்குமால் பார்த்து சர்வேயரை கூட்டிட்டு வந்து அளக்கவும், அளந்தபிறகு சர்வேயர் கொடுக்ககூடிய சான்றிதழை பெற்றுதர ஏற்பாடு செய்வதற்கும் பணம் - ரூபாய் 30,000/- செலவாகும், நீங்க முதல்ல இ.சேவை மையம் சென்று உங்களுடைய பத்திரத்தை காண்பித்து ஒவ்வொரு சர்வே எண்ணிற்கும் அரசு கட்டணம் செலுத்திவிட்டு, அந்த ரசீதோடு நான் கேட்ட ரூபாய் 30,000/- பணத்தை ரெடிபண்ணி கொண்டுவந்து என்னிடம் கொடுங்க என்று சொன்னார். அதற்கு நான் சர்வே பண்ணி அளந்து கொடுக்க அவ்வளவு பணம் ஆகுமா சார் என்று கேட்டேன் அதற்கு அவர் சும்மாவா அளந்து கொடுக்க முடியும், நீங்க முதல்ல இ.சேவை மையத்துல கட்ட வேண்டிய அரசு கட்டணத்தை கட்டிட்டு ரசீதை கொண்டு வாங்க பிறகு பேசிக்கிருவோம் என்று கூறினார். ஆகையால் VAO சார் சொன்னதுபோல் மேற்படி நிலங்களை சர்வே பண்ணுவதற்கு இ.சேவை மையம் வழியாக கட்ட வேண்டிய கட்டணங்களை கட்டுவதற்கு, காரியாபட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு எதிரே உள்ள இ.சேவை மையத்தில் கடந்த 20.06.2024 ஆம் தேதியில் மேற்படி திரு.ரவி பெயரில் உள்ள இடத்திற்கு ரூபாய் 860/- தொகையும், கடந்த 21.06.2024 ஆம் தேதியில் மேற்படி திரு.கார்த்திக் பெயரிலுள்ள இடத்திற்கு ரூபாய் 860/- தொகையும் மற்றும் திரு.கண்ணன்பாபு பெயரில் உள்ள இடத்திற்கு ரூபாய் 1,660/- தொகையும் செலுத்தி, தனிதனியே ரசீது பெற்றேன். பின்னர் சொந்த வேலைகள் இருந்ததால் VAO சார் அவர்களை காரியாபட்டிக்கு சென்று சந்திக்க முடியாமல் இருந்தேன். இந்த நிலையில் நேற்றைக்கு முந்தைய நாள் (06.7.2024) சனிக்கிழமை காலை சுமார் 10.30 மணியளவில் என்னுடைய ஊருக்கு வந்த VAO திரு செல்வராஜ் அவர்களிடம் மேற்படி ரசீதுகளை காண்பித்து, நான் பராமரித்து வரும் மேற்படி நிலங்களை சர்வே பண்ணுவது சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர் ரசீதுகளை மட்டும் காண்பிக்கிறீர்கள், நான் கேட்ட ரூபாய் 30,000 பணம் எங்கே என்று கேட்டார். அதற்கு நான், அவ்வளவு பணத்துக்கு நான் எங்கே போறது சார், அளக்குறதுக்காக நீங்க சொன்ன மாதிரி இ-சேவை மையத்தில கட்டின ரூபாய்க்கே நிலத்தோட உரிமையாளர்கள் எங்ககிட்ட எதையும் கேக்காதீங்க, நீங்களே எல்லாத்தையும் பார்த்துகோங்கன்னு சொல்லிட்டாங்க சார், அதனால நானே ரொம்ப கஷ்டப்பட்டு புரட்டித்தான்

கட்டியிருக்கேன் சார், நீங்க பார்த்து செஞ்சு கொடுங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர், உங்களுக்கு தெரியாதது ஒன்னுமில்லை, நீங்க விவரமான ஆளு, அதனால நீங்க வேணா ரூபாய் 5000/த்தை குறைச்சுட்டு ரூபாய் 25,000 பணத்தை ரெடி பண்ணி கொண்டுவந்து கொடுங்க, அந்த பணத்தை ரெடி பண்ணி கொண்டுவந்து என்னிடம் கொடுத்தால்தான் உங்க வேலையை முடிச்சு கொடுப்பேன் என்று கராறாக கூறினார். நான் அப்போது வேறு வழியில்லாமல் அவரிடம் சரியென்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். சர்வேயர் மூலம் அளக்க நாமதான் அரசுக்கு பணம் செலுத்திவிட்டோம்ல இனி எதற்கு லஞ்சப்பணம் கொடுக்கனும் என்று நான் யோசித்து, யாருக்கும் லஞ்சம் கொடுக்க வேண்டாம் என நினைத்து, சனி (மற்றும்) ஞாயிற்று கிழமைகள் விடுமுறை நாட்களாக இருந்ததால் இன்று (08.07.2024) லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் செய்யலாம் என்று முடிவு செய்து, என்னுடைய பராமரிப்பில் இருந்துவரும் மேற்படி நிலங்களை சர்வேயரை கூட்டிவந்து அளந்து கொடுப்பதற்கும், சர்வேயர் நிலத்தை அளந்து கொடுத்த பின்பு சர்வேயருடைய சான்றிதழ் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் என்னிடம் ரூபாய் 25,000/- பணத்தை லஞ்சமாக கேட்ட டி.கடமங்குளம் V.A.O. திரு.செல்வராஜ் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டு, மேற்படி நிலங்களை அளப்பதற்கு VAO சார் சொன்னதுபோல் இ.சேவை மையத்தில் கட்டிய ரசீதுகளின் நகல்களை இணைத்து கொடுக்கிறேன். இப்படிக்கு (sd) மு.நக்கீரன் 8/7/2024 Sir, Received the complaint on 08.07.2024 at 15.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.6/2024 u/s 7 of the P.C Act 1988 as amended in 2018 on 08.07.2024 at 17.00 hrs and took up for investigation. (Sd) (R.Boominathan) 8/7/2024 Insp.of Police.,V&AC,VNR.

The original FIR along with original complaint is submitted to the court of the CJM cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

Insp of Police, V&AC, VNR.